# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2018–2019

### மானியக் கோரிக்கை எண் : 13

## இரா. காமராஜ்

உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| | முகவுரை | 1-3 |
| 1 | பொது விநியோகத் திட்டம் | 4-33 |
| 2 | நுகர்வோர் பாதுகாப்பு | 34-45 |
| 3 | விலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் | 46-49 |
| 4 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 50-82 |
| 5 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 83-93 |
| 6 | அமலாக்கம் | 94-104 |
| | முடிவுரை | 105-106 |

## முகவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு வழங்குவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த இலக்கை அடைய அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை பொருளாதார வேற்றுமை உணர்வு இன்றி அனைத்து குடும்பங்களும் பயன்பெறுமாறு நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டம் உணவுப் பாதுகாப்பை வழங்கும் சிறந்த திட்டம் என அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது.

நியாயவிலைக் கடைகளுக்கு குறித்த நேரத்தில் பொருட்களை விநியோகிக்கவும் அதனை சிறந்த முறையில் கண்காணிக்கவும் தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதற்கு ஏதுவாக அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது போலி குடும்ப அட்டைகள் மற்றும் போலிப்பட்டியல்கள் களைவதற்கும் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி மற்றும் இதர பொருட்களை முறைப்படுத்தவும் உதவியாக உள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் நவீன வசதிகளுடன் கூடிய சேமிப்பு வசதிகளை விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் பொருட்களின் சேமிப்பு இழப்பினை கட்டுப்படுத்தவும் பொருட்களின் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியும், இயக்கியும் வருகிறது.

நுகர்வோர் பாதுகாப்பு என்பது இத்துறையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக விளங்குவதால் அதனை செயல்படுத்தும் வகையில் தகுதி வாய்ந்த நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள் அமைக்கப்பட்டு அதற்கு போதுமான அளவு அதிகாரம் வழங்கப்பட்டு இதன்மூலம் நுகர்வோர் குறைகள் முடிக்கப்பட்டு நுகர்வோர் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு விலைக் கண்காணிப்புக் குழு ஒன்றை மாநில அளவில் அமைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினை கண்காணித்து கட்டுப்படுத்த அவ்வப்பொழுது கூட்டம் நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அத்தியாவசியப் பொருட்களின் பதுக்கல் மற்றும் கடத்தலை தடுக்க குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் அமலாக்கப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

## இயல் - 1

## பொது விநியோகத் திட்டம்

### 1.1 முன்னுரை

தமிழ்நாடு, பொருளாதார வேற்றுமை இன்றி பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை அனைத்துக் குடும்பங்களுக்கும் விரிவுபடுத்தி, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் எக்காரணத்தினாலும், எவரும் விடுபட்டுவிடாமல், அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பதில் பயனுள்ள கருவியாக சிறப்புடன் செயல்பட்டு வருவதாக அனைத்து தரப்பினராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 01.11.2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA)-2013 அமல்படுத்தப்பட்டது. இதன்படி, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட அளவின் அடிப்படையில் அரிசி வழங்கப்படுவதுடன் ஏற்கனவே குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அரிசியின் அளவை குறைவு செய்யாமலும்,

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமலும் இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 01.06.2011 முதல் விலையின்றி அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

பொது விநியோகத் திட்டம், முழு கணினிமயமாக்கல் பணியானது அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீடு, நகர்வு மற்றும் விற்பனை ஆகியவற்றை கண்காணிப்பதும், நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பினை உறுதி செய்வதற்கும் உதவியாக உள்ளது. இத்துறை பொது மக்களுக்கு அளித்து வரும் சேவையினை எளிதில் பெறுவதற்கும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் உள்ளது. நடைமுறையில் இருந்த பழைய காகித வடிவிலான குடும்ப அட்டைகள் முற்றிலுமாக மாற்றப்பட்டு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

## 1.2 உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பங்கு

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பொது விநியோகத் திட்டத்தினை

ஒழுங்கு முறைப்படுத்துவது குறித்த அரசின் கொள்கைகளை அமல்படுத்தியும், மேலும், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் பிரிவுகளையும் அதன் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளையும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

மேற்காணும் நடவடிக்கைகளுடன், இத்துறை நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் முக்கியமான பங்கு வகிக்கிறது. பொதுமக்கள் மற்றும் பள்ளி/கல்லூரி மாணவர்களிடையே நுகர்வோர் உரிமைகள் மற்றும் நுகர்வோர் சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் (த.நு.அ) மற்றும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் (கு.நு.ம) மூலமாக இத்துறை மேற்கொண்டு வருகிறது.

### 1.3 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பங்கு

தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவுக் கழகத்திலிருந்து அத்தியாவசியப் பொருட்களான அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றை கொள்முதல் செய்து

அவற்றை சேமித்து பொது விநியோகத் திட்டத்திற்கு விநியோகம் செய்து வருகிறது. இதே போன்று சர்க்கரையை தமிழ்நாடு சர்க்கரை கூட்டமைப்பால் கண்டறியப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்து குறிப்பிட்டுள்ள கிடங்குகளுக்கு வழங்கியும், தேவைப்படும்போது வெளிச்சந்தையின் மூலமாக கொள்முதல் செய்தும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு தேவையான இதர அத்தியாவசியப் பொருட்களையும் நேரடியாக வெளிச் சந்தையில் ஒப்பந்தப்புள்ளிகளின் மூலமாக கொள்முதல் செய்தும் வருகிறது.

### 1.4 நியாய விலைக்கடைகள்

பெரும்பாலான நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், குறைந்த எண்ணிக்கையிலான நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. தனியார் எவரும் நியாய விலைக் கடையை நடத்த அனுமதிக்கப்படுவதில்லை என்பது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்கும் நடவடிக்கையின் கீழ் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டு அதன்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது நியாயவிலைக் கடைகளில் அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயமாக்கப்பட்டதன் பயனாக, பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டினை இணையவழி (Online) மூலம் மேற்கொள்ளுதல், அத்தியாவசியப் பொருட்களின் நகர்வினை நிகழ் நேரத்தில் கண்காணித்தல், கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகள் எளிதாக மேற்கொள்ளப்படுகிறது.

31.05.2018 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 35,169 நியாய விலைக் கடைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 25,589 முழு நேரக் கடைகளும்,

9580 பகுதி நேரக் கடைகளும் ஆகும். இதன் விபரம் பின்வருமாறு :

| வ. எ. | நிறுவனம் | முழு நேரக் கடைகள் | பகுதி நேரக்கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,178 | 277 | 1,455 |
| 2 | கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் இயங்குபவை) | 23,727 | 9,100 | 32,827 |
| 3 | இதர கூட்டுறவுச் சங்கங்கள் | 314 | 162 | 476 |
| 4 | மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தும் நியாய விலைக் கடைகள் | 370 | 41 | 411 |
| | **மொத்தம்** | **25,589** | **9,580** | **35,169** |

மக்கள் எளிதில் சென்று வர முடியாத பகுதிகள், மலைப்பகுதிகள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவும் வகையில், குடும்ப அட்டைதாரர்கள் வசதியாக சென்று வர புதிய நியாய விலைக் கடைகள் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்கிறது. அதனால், அவர்கள் இருப்பிடத்திலிருந்து 1.5 கிலோ மீட்டருக்கு மேல் நடந்து சென்று பொருட்களை வாங்கும் நிலை இல்லை. குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளின்படி, நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை தேவைப்படும் போது தளர்த்தி புதிய நியாய விலைக் கடைகள் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### 1.5 மின்னணு குடும்ப அட்டைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் 01.04.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. 31.05.2018 நிலவரப்படி 1,96,16,093 மின்னணு குடும்ப அட்டைகள் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளன.

### 1.5.1 குடும்ப அட்டைகளின் வகைகள்

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைதாரர்கள் தங்களின் தேவை மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் தங்களுக்கான குடும்ப அட்டை வகையினை தேர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் தகுதியான அளவு ஆகியவற்றின் அடிப்படையில் குடும்ப அட்டைகள் ஐந்து வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 31.05.2018-ன்படி பல்வேறு வகையான குடும்ப அட்டைகளின் விபரம் மற்றும் அவற்றிற்கு பெறத் தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் அளவு மற்றும் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு :

| வ. எ. | குடும்ப அட்டையின் வகை | தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் விபரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH) | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 76,99,940 |

| வ. எ. | குடும்ப அட்டையின் வகை | தகுதியான அத்தியாவசியப் பொருட்கள் விபரம் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் - அந்தியோதயா அன்னயோசனா (PHH-AAY) | 35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 18,64,600 |
| 3 | முன்னுரிமை-யற்ற குடும்ப அட்டைகள் (NPHH) | அரிசிஉள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 90,08,842 |
| 4 | முன்னுரிமை-யற்ற குடும்ப அட்டைகள் - சர்க்கரை (NPHH-S) | சர்க்கரை விருப்பகுடும்ப அட்டைகள் (அரிசி தவிர பிற அத்தியாவசியப் பொருட்கள்) | 10,01,605 |
| 5 | முன்னுரிமை-யற்ற குடும்ப அட்டைகள் - எப்பொருளும் இல்லாதவை (NPHH-NC) | எப்பொருளும் இல்லாதவை | 41,106 |
| மொத்தம் | | | 1,96,16,093 |

### 1.5.2 அந்தியோதயா அன்னயோசனா திட்ட குடும்ப அட்டைகள்

மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அவ்வப்போது புலத்தணிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் வாயிலாக, வறியவர்களில் மிகவும் வறியவர்கள் கண்டறியப்பட்டு அவர்களது குடும்ப அட்டைக்கு அந்தியோதயா அன்னயோசனா திட்ட முத்திரையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை மைய அரசின் அறிவுரைகளின்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் இருந்து மிக வறிய நிலையிலுள்ள தகுதி படைத்த பயனாளிகள் கண்டறியப்பட்டு இத்திட்டம் அவ்வப்போது விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. நம் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அந்தியோதயா அன்னயோசனா திட்டப் பயனாளிகளின் எண்ணிக்கை 18,64,600 ஆகும்.

அந்தியோதயா அன்னயோசனா திட்டப் பயனாளிகளுக்கு 01.06.2011 முதல் 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நம்மாநிலத்தில் மிகவும் வறிய நிலையில்

உள்ளவர்களுக்கு முழுவதுமாக உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 1.5.3 திருநங்கைகளுக்கு குடும்ப அட்டைகள்

திருநங்கைகள் சமூகத்தில் ஒரு அங்கமாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படுகிறது. 31.05.2018 முடிய தமிழ்நாட்டில், 2,293 குடும்ப அட்டைகள் திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 1.5.4 காவல் துறை / சிறைத் துறை / வனத் துறை பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்

மின்னணு குடும்ப அட்டைகள் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், காவல் துறை பணியாளர்களில் இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலும், வனத்துறை பணியாளர்களில் காவடி முதல் வனச் சரகர் வரையிலும் மற்றும் சிறைத்துறை பணியாளர்களில் இரண்டாம் நிலை காவலர் முதல் துணை சிறைக் காவலர் வரையிலும் உள்ள சீருடைப் பணியாளர்களுக்கு, முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH) வழங்கப்பட்டு நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரங்களில்

காவலர் அட்டை' எனக் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சீருடைப் பணியாளர்களின் நலன் கருதி, நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களான பருப்பு, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகியவை கீழ்க்கண்ட விவரப்படி பாதி விலையில் வழங்கப்படுகிறது:—

| | | |
|---|---|---|
| சர்க்கரை | - | ரூ.12.50 |
| பருப்பு | - | ரூ.15.00 |
| பாமாயில் | - | ரூ.12.50 |

31.05.2018 நிலவரப்படி 64,450 குடும்ப அட்டைகள் நடைமுறையில் உள்ளன.

### 1.5.5 முதியோர் உதவித் தொகைபெறுவோருக்கான அட்டை (OAP Cards)

தற்போது அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ள 1,96,16,093 மின்னணு குடும்ப அட்டைகளைத் தவிர 4,31,475 முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கான அட்டைகளும் உள்ளன. இந்த அட்டைகளுக்கு மாதந்தோறும் 5 கிலோ விலையில்லா அரிசி மட்டும் வழங்கப்படுகிறது.

### 1.5.6 தகுதியற்ற குடும்ப அட்டைகளைக் களைதல்

குடும்ப அட்டை வழங்கும் அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தீவிரத் தணிக்கையை மேற்கொள்வதன் மூலம் போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டு நீக்கப்படுகின்றன. அதிகபட்ச மானிய விலையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும் என்பதால், மேற்படி பணி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் பொருட்டு 01.06.2011 முதல் தலத் தணிக்கையின் மூலம் 5,47,550 குடும்ப அட்டைகள் தகுதியற்றதென கண்டறியப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. 2016-2017ஆம் ஆண்டில் குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் விவரங்கள் சேகரிக்கப்பட்ட பின் சுமார் 10 லட்சம் தகுதியில்லா குடும்ப அட்டைகள் நீக்கப்பட்டதன் விளைவாக நுகர்வு 1.40 கோடி அலகுகள் குறைந்துள்ளது.

### 1.6 அத்தியாவசியப் பொருட்களின் விநியோக அளவு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை

ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதனுடன் கூடுதலாக துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. விநியோகிக்கப்பட்டு வரும் அத்தியாவசியப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றிற்கான விலை ஆகியவற்றின் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | பொருட்கள் | விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றிற்கு) | மாதாந்திர விநியோக அளவு |
|---|---|---|---|
| 1 | அரிசி | 01.06.2011 முதல் அரிசி விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது | அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு நபருக்கும் (குழந்தை உட்பட) தலா 5 கிலோ வீதம் அல்லது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்துவதற்கு முன் வழங்கப்பட்ட அரிசியின் அளவில் |

| | | | |
|---|---|---|---|
| | | | எது அதிகமோ அது வழங்கப்பட்டு வருகிறது. அந்தியோதயா அன்னயோசனா திட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு, குடும்ப அட்டை ஒன்றுக்கு தலா 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது. |
| 2 | சர்க்கரை | அந்தியோதயா அன்ன யோசனா திட்டத்தின் (AAY) கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர் களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.13.50/- | மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு 500 கிராம் வீதம் அதிகபட்ச அளவு 2 கிலோவும், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு நபருக்கு மாதமொன்றுக்கு 500 கிராம் வீதமும், கூடுதலாக |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் இதர குடும்ப அட்டைதாரர் களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.25/- | மாதமொன்றுக்கு 3 கிலோ சர்க்கரையும், அதிகபட்சமாக 5 கிலோவும் வழங்கப்படுகிறது |
| 3 | கோதுமை | அரசாணை (நிலை) எண். 16, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் : 02.02.17-ன்படி கோதுமை விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது | சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு அரிசியின் அளவில் அரிசிக்கு பதிலாக 10 கிலோ கோதுமை, இதர பகுதிகளில் 5 கிலோ கோதுமை, இருப்பின் அளவைப் பொறுத்து விலையின்றி வழங்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| 4 | மண்ணெண்ணெய் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.13.60 முதல் ரூ.14.20வரை | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை. |
| 5 | துவரம் பருப்பு | ஒரு கிலோ ரூ. 30/- | மாதந்தோறும் குடும்ப அட்டை ஒன்றுக்கு 1 கிலோ |
| 6 | பாமாயில் | ஒரு லிட்டர் ரூ.25/- | மாதந்தோறும் குடும்ப அட்டை ஒன்றுக்கு 1லிட்டர் |

### 1.6.1 அரிசி

தமிழ்நாட்டு மக்களின் பிரதான உணவாக அரிசி திகழ்கிறது. மத்திய தொகுப்பிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இந்திய உணவுக் கழகம் மூலமாக அரிசி

ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் இந்திய உணவுக் கழகம் நிர்ணயித்துள்ள அரிசியின் விற்பனை விலை விவரம் பின்வருமாறு :

| வ. எண். | வகை | மாத ஒதுக்கீடு (மெ. டன்னில்) | இந்திய உணவுக் கழக விற்பனை விலை (கிலோ ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | அந்தியோதயா அன்னயோசனா(AAY) | 57,437 | ரூ. 3.00 |
| 2 | முன்னுரிமை குடும்பங்கள் (Priority House Holds) | 1,35,784 | ரூ. 3.00 |
| 3 | ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over) | 99,773 | ரூ. 8.30 |
| மொத்தம் | | 2,92,994 | |

அரிசியின் சராசரி மாதாந்திர நுகர்வு 3.17 இலட்சம் மெட்ரிக் டன்.

### 1.6.2 சர்க்கரை

சர்க்கரை ஆலைகளுக்கு லெவி கட்டுப்பாடுகளை ஜூன் 2013 முதல் மத்திய அரசு நீக்கியதன்

விளைவாக மாநில அரசுகள் பொது விநியோகத் திட்ட சர்க்கரை விநியோகத்திற்கு மாற்று ஏற்பாடுகளை செய்துகொள்ளுமாறு மத்திய அரசால் அறிவுறுத்தப்பட்டது. ஆனால், நியாயவிலைக் கடைகளில் பொது விநியோகத் திட்ட சர்க்கரையினை கிலோ ஒன்றிற்கு ரூ 13.50 எனத் தொடர்ந்து விற்பனை செய்து வரும் மாநிலங்களுக்கு மத்திய அரசு பொது விநியோகத் திட்ட சர்க்கரை ஒதுக்கீடுகளுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ18.50 மானியம் வழங்க உறுதியளித்திருந்தது. இதன் மூலம் மாதம் ஒன்றிற்கு வரையறுக்கப்பட்ட 10,820 மெ.டன் சர்க்கரைக்கு மட்டும் மானியம் வழங்கப்பட்டு வந்தது. எனினும், 01.06.2017 முதல் மத்திய அரசு மாதம் ஒன்றிற்கு வழங்கி வந்த இந்த அளவினை குறைத்து அந்தியோதயா அன்னயோசனா (AAY) குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் ரூ.18.50 என்கிற மானிய விலையில் 1,864 மெ.டன்னுக்கான மானியத்தை மட்டும் வழங்கி வருகிறது. இது மாநிலத்தின் மானிய சுமையை அதிகரித்துள்ளது. இந்த செலவினங்களை கட்டுப்படுத்த மாநில அரசு சர்க்கரை விலையினை மாற்றம் செய்து அந்தியோதயா அன்னயோசனா (AAY) அல்லாத இதர குடும்ப அட்டைகளுக்கு கிலோ ஒன்றுக்கு

ரூ.25/- என்ற விலையில் 01.11.2017 முதல் வழங்க அரசாணை (நிலை) எண். 149, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 27.10.2017ன் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.6.3 கோதுமை

மத்திய அரசு உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ன்படி நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் 13,485 மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கீடு செய்து வருகிறது. 02.02.2017 முதல் சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு 10 கிலோ வீதமும், ஏனைய பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 கிலோ வீதமும் நியாயவிலைக் கடைகளில் உள்ள இருப்பின் அளவைப் பொறுத்து அரிசிக்கு பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

## 1.7. மண்ணெண்ணெய்

### 1.7.1 மண்ணெண்ணெய் ஒதுக்கீடு

தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மத்திய அரசால் படிப்படியாக

குறைக்கப்பட்டு தற்போது மாநிலத்தின் மாதாந்திர தேவையில் 38 சதவிகிதம் மட்டுமே அதாவது அக்டோபர் 2017 முதல் 16148 கி.லி மாத ஒதுக்கீடாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் மண்ணெண்ணெய் பெற தகுதி உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு சீராக மண்ணெண்ணெய் வழங்க மாத ஒதுக்கீடாக 42668 கி.லி மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சீரான அளவில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்ற நோக்கில், மாநிலத்தின் மண்ணெண்ணெய் முழுத் தேவையினையும் ஒதுக்கீடு செய்ய மத்திய அரசினை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும் மத்திய அரசு 01.07.2016 முதல் மண்ணெண்ணெய்க்கான கிடங்கு முன் இருப்பு விலையினை இதர காரணிகளை உள்ளடக்கி லிட்டர் ஒன்றிற்கு ரூ. 8.62 என்று இதுவரை இல்லாத அளவில் உயர்த்தியதற்கு மாநில அரசின் எதிர்ப்பினை பதிவு செய்ததுடன், இவ்விலை உயர்வினை முழுவதுமாக திரும்பப் பெற மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளது. 01.08.2011 முதல் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு

லிட்டருக்கு ரூ.13.60 முதல் ரூ.14.20 வரையிலான சில்லறை விற்பனை விலையில் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**1.7.2 மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குதலை ஒழுங்குபடுத்த மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் 5,000 முதல் 15,000 வரை குடும்ப அட்டைதாரர்கள் மண்ணெண்ணெய் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுவதால் மாதம் முழுவதற்கும் தேவையான இருப்பு மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சரியான அளவில் மண்ணெண்ணெய் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது. தற்போது கூட்டுறவுத் துறையின் கீழ் 255 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 36 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், ஆக

மொத்தம் 291 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அனைத்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.8 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

வெளிச்சந்தையில் துவரம்பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் விலையேற்றத்தினை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம்பருப்பு மற்றும் பாமாயில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 20,000 மெட்ரிக் டன் துவரம்பருப்பு மற்றும் 1,50,00,000 லிட்டர் (பாக்கெட்டுகள்) செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை மாதந்தோறும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண். 14, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 29.01.2018-ன்படி, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் விநியோகம் பிப்ரவரி 2019 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 1.9 ரமலான் மாதத்தில் சிறுபான்மையினருக்கு அரிசி வழங்குதல்

ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு பள்ளிவாசல்களுக்கு சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் பச்சரிசி ஆண்டுதோறும் அரசினால் வழங்கப்பட்டு வருகிறது. 2018ஆம் ஆண்டு 5284.28 மெட்ரிக் டன் பச்சரிசி கிலோ ரூ.1/- என்ற விலையில் 2927 பள்ளிவாசல்களுக்கு ரமலான் நோன்பிற்காக மாநிலம் முழுவதும் வழங்கப்பட்டது. இதற்கென ரூ.52,84,289 மாநில அரசு ஒதுக்கியது.

## 1.10 பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம்

தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட வழிவகை செய்யும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், காவலர் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கு1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, இரண்டு அடி நீள கரும்புத் துண்டுடன் தலா 20 கிராம் முந்திரி, உலர் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவை அடங்கிய சிறப்பு பொங்கல்

பரிசுத் தொகுப்பு 2018-ம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டது.

**1.11 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்**

தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தினை தமிழ்நாடு அரசு 2016 நவம்பர் 1-ம் தேதி முதல் செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின்படி நபர் ஒருவருக்கு மாதந்தோறும் 5 கிலோ அரிசி என்ற அளவில் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், இச்சட்டத்தினை செயல்படுத்தும் போது அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் ஏற்கனவே பெற்று வந்த அரிசியின் அளவு அல்லது நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 5 கிலோ அரிசி என்ற அளவு இவற்றில் எது அதிகமோ அந்த அளவில் அரிசியினை விலையின்றி பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அனைவருக்குமான பொது விநியோகத்திட்டத்தின் தன்மை மாறாமல், இத்திட்டத்தை செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் முன்னுரிமையுள்ள மற்றும் முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கான

மாதாந்திர வழங்கல் அளவில் வித்தியாசம் இல்லாவிட்டாலும், முன்னுரிமை பயனாளிகளை கண்டறிவது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அவசியமானதாகும். அதன்படி மத்திய அரசு நிர்ணயித்துள்ள நகரப் பகுதியில் 37.79% மற்றும் கிராமப் பகுதியில் 62.55% என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் முன்னுரிமை பயனாளிகளை கண்டறியும் பொருட்டு 27.10.2016 அன்று அரசால் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டது. முன்னுரிமை பயனாளிகள் மற்றும் முன்னுரிமையற்ற பயனாளிகளின் இறுதிப் பட்டியல் www.tnpds.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

### 1.11.1 கண்காணிப்புக் குழுக்கள்

தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017-ன் கீழ், பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் உரியவர்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திட, மாநிலம் / மாவட்டம் / வட்டம் மற்றும் நியாயவிலைக் கடை வாரியாக கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மாநில/ மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் காலாண்டிற்கு குறைந்தது ஒரு முறையேனும், வட்டம்/

மண்டலம் மற்றும் நியாயவிலைக் கடை அளவிலான குழுக்கள் மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டும்.

### 1.11.2 குறைதீர் அமைப்பு

பொது மக்களின் குறைகளை தீர்வு செய்யும் பொருட்டு, மாவட்ட வருவாய் அலுவலர்கள் மாவட்ட குறை தீர் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை மாநகரைப் பொறுத்த வரையில், துணை ஆணையர் வடக்கு/தெற்கு ஆகியோர் மாவட்ட குறைதீர் அலுவலர்களாக செயல்பட்டு வருகிறார்கள். குறைதீர் அலுவலர்களின் தொடர்பு விவரங்கள் பொது விநியோகத் திட்ட வலைதளம் மற்றும் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் வலுவான குறைதீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாக கட்டணமில்லா தொலைபேசி எண் 1967 மற்றும் 1800 425 5901 தற்போது பயன்பாட்டில் உள்ளது.

### 1.11.3 மாநில உணவு ஆணையம்

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ஐ நடைமுறைபடுத்தும் விதமாக 16.02.2018 அன்று மாநில உணவு ஆணையம் தமிழ்நாடு அரசினால் அமைக்கப்பட்டு, அதற்கு தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாநில உணவு ஆணையம் 28.02.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

### 1.12 பொதுவிநியோகத் திட்டத்தினை கணினி மயமாக்கல் மற்றும் மின்னணு குடும்பஅட்டை (Smart family Card) வழங்குதல்

தமிழ்நாட்டில் ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர் மூலமாக பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிப்பதற்கு ஏதுவாக அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விற்பனை முனைய இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கியதன் மூலமாக, பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டினை இணையவழி மூலம் மேற்கொள்ளுதல்,

அதன் நகர்வினை நிகழ் நேரத்தில் கண்காணித்தல், கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளில் தேவையான அளவு அத்தியாவசியப் பொருட்கள் இருப்பை உறுதிசெய்தல் மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களின் உரிம அளவு சரியான முறையில் விநியோகிக்கப்படுவதை கண்காணித்தல் போன்றவற்றோடு தகுதியற்ற குடும்ப அட்டைகள் மற்றும் முறைகேடாக பட்டியலிடுதல் ஆகியவற்றை களைய உதவி செய்கிறது. மேலும், பொதுமக்கள் இணையம் மூலமாக புதிய குடும்ப அட்டைகள் பெற விண்ணப்பம் செய்வதற்கும், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றை மேற்கொள்வதற்கும் மின்னணு குடும்ப அட்டை தொடர்பான விண்ணப்பங்களின் நிலையை அறிந்து கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வட்ட வழங்கல் அலுவலகங்களுக்கு பொது மக்கள் செல்லும் நேரம் சேமிக்கப்படுகிறது.

**1.13 உணவு மானியம்**

பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள்

அதிக மானியத்திற்குட்பட்ட விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அரிசி விலையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது. 2018-2019-ஆம் நிதியாண்டிற்கு ரூ.6,000 கோடியினை அரசு உணவு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

# இயல் - 2

## நுகர்வோர் பாதுகாப்பு

### 2.1 முன்னுரை

தமிழ்நாடு துடிப்பான நுகர்வோரை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதை தொடர்ந்து, இத்துறை நுகர்வோர் பாதுகாப்பிற்கு தலையாய முக்கியத்துவம் அளிக்கிறது.

நுகர்வோருக்கு சேவை / பொருள்கள் தரத்தில் சமரசமின்றி உரிய விலையில் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வது நுகர்வோர் பாதுகாப்பின் முக்கிய நோக்கமாகும்.

நுகர்வோர் அவர்களது உரிமைகள், பொறுப்புகள் மற்றும் நுகர்வோர் குறைகளை களைவது குறித்து உள்ள வழிமுறைகள் குறித்து கற்பித்தலின் மூலம் நுகர்வோர் அளவில் விழிப்புணர்வை உருவாக்க அரசு முயன்று வருகிறது. விரைவில் தீர்வு செய்வதற்கு ஏதுவாக போதிய கட்டமைப்பைக் கொண்ட திறம்பட செயல்படக்கூடிய குறைதீர் அமைப்பை ஏற்படுத்துவதிலும் அரசு உறுதியாக உள்ளது.

## 2.2 நுகர்வோர் குறைகளுக்கான சட்டப்படியான தீர்வுகள்

1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய 3 அடுக்கு குறைதீர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன :-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்

### 2.2.1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

இவ்வாணையம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்கு மேல்முறையீட்டு ஆணையமாக புதுதில்லியில் செயல்படுகிறது. இவ்வாணையத்தில், ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணங்களுக்கு நுகர்வோர் நேரடியாக வழக்கு தொடரலாம். இவ்வாணையம் அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் தீர்ப்புகளின் மீதான

மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும்.

**2.2.2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்**

ரூபாய் இருபது இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடி வரை நிவாரணம்கோரும் நுகர்வோர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை தலைவராகவும், இரண்டு நீதிசார் உறுப்பினர்களும் மற்றும் இரண்டு நீதி சாரா உறுப்பினர்களும் அவற்றில் ஒரு பெண் உறுப்பினரையும் கொண்ட அமைப்பாகும். மாநில ஆணையம் மற்றும்31 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் நிர்வாகத்தை கவனிக்க துறைத் தலைவராக செயல்பட பதிவாளர் உள்ளார். தென் மாவட்ட நுகர்வோர்களின் நலன் கருதி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் கிளையானது மதுரையில் 11.8.2012 முதல் செயல்பட்டு வருகிறது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவை அந்தந்த மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் தீர்ப்புகளின் மீதான மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களை தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும். மாநில ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மே-2018 வரை 28,957 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அதில் 24,953 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவிகிதம் 86.17 ஆகும். ஜனவரி 2017 முதல் மே 2018 வரையிலான காலத்தில் மாநில நுகர்வோர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. :-

| மாதங்கள் | மேல்முறையீட்டு மனுக்கள் | | | | | நுகர்வோர் வழக்குகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாதஇறுதியில் நிலுவையிலுள்ளவை வழக்குகள் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ளவை வழக்குகள் | பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | மாதஇறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் |
| ஜனவரி, 17 | 1770 | 33 | 1803 | 7 | 1796 | 1351 | 16 | 1367 | 2 | 1365 |
| பிப்ரவரி, 17 | 1796 | 71 | 1867 | 7 | 1860 | 1365 | 8 | 1373 | 7 | 1366 |
| மார்ச், 17 | 1860 | 76 | 1936 | 14 | 1922 | 1366 | 34 | 1400 | 4 | 1396 |
| ஏப்ரல், 17 | 1922 | 38 | 1960 | 19 | 1941 | 1396 | 31 | 1427 | 2 | 1425 |
| மே, 17 | 1941 | 56 | 1997 | - | 1997 | 1425 | 36 | 1461 | - | 1461 |
| சூன் , 17 | 1997 | 34 | 2031 | 9 | 2022 | 1461 | 25 | 1486 | 2 | 1484 |
| சூலை, 17 | 2022 | 46 | 2068 | 30 | 2038 | 1484 | 48 | 1532 | 1 | 1531 |
| ஆகஸ்டு, 17 | 2038 | 49 | 2087 | 16 | 2071 | 1531 | 45 | 1576 | 4 | 1572 |
| செப்டம்பர், 17 | 2071 | 33 | 2104 | 18 | 2086 | 1572 | 21 | 1593 | 3 | 1590 |
| அக்டோபர், 17 | 2086 | 8 | 2094 | 7 | 2087 | 1590 | 33 | 1623 | 6 | 1617 |
| நவம்பர், 17 | 2087 | 24 | 2111 | 18 | 2093 | 1617 | 18 | 1635 | 15 | 1620 |
| டிசம்பர், 17 | 2093 | 61 | 2154 | 15 | 2139 | 1620 | 35 | 1655 | 12 | 1643 |
| ஜனவரி, 18 | 2139 | 21 | 2160 | 13 | 2147 | 1643 | 17 | 1660 | 12 | 1648 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிப்ரவரி,'18 | 2147 | 27 | 2174 | 30 | 2144 | 1648 | 28 | 1676 | 6 | 1670 |
| மார்ச்,'18 | 2144 | 51 | 2195 | 26 | 2169 | 1670 | 23 | 1693 | 10 | 1683 |
| ஏப்ரல்,'18 | 2169 | 57 | 2226 | 21 | 2205 | 1683 | 18 | 1701 | 13 | 1688 |
| மே,'18 | 2205 | 15 | 2220 | 4 | 2216 | 1688 | 11 | 1699 | 1 | 1698 |

### 2.2.3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன்படி, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் இருக்க வேண்டும். 31 மாவட்டங்களில், நீதிமுறை சாரா மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் நுகர்வோர், ரூபாய் இருபது இலட்சம் வரையிலான நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றமானது ஓய்வு பெற்ற ஒரு மாவட்ட நீதிபதியை தலைவராகவும் மற்றும் இரண்டு உறுப்பினர்களை கொண்ட அமைப்பாகும். அவற்றுள் ஒருவர் பெண் உறுப்பினர். மாவட்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மே-2018 வரை 1, 18,859 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 1,09,713 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவிகிதம் 92.30 ஆகும். ஜனவரி 2017 முதல் மே 2018

வரையிலான காலத்தில் மாநிலத்தில் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாதங்கள் | மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | பதிவான வழக்குகள் | மொத்தம் | முடிவு செய்யப்பட்ட வழக்குகள் | நிலுவையில் உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|---|
| ஜனவரி, 17 | 8721 | 202 | 8923 | 212 | 8711 |
| பிப்ரவரி, 17 | 8711 | 231 | 8942 | 190 | 8752 |
| மார்ச், 17 | 8752 | 277 | 9029 | 156 | 8873 |
| ஏப்ரல், 17 | 8873 | 234 | 9107 | 147 | 8960 |
| மே, 17 | 8960 | 228 | 9188 | 161 | 9027 |
| சூன், 17 | 9027 | 202 | 9229 | 147 | 9082 |
| சூலை, 17 | 9082 | 283 | 9365 | 195 | 9170 |
| ஆகஸ்டு,17 | 9170 | 205 | 9375 | 207 | 9168 |
| செப்டம்பர், 17 | 9168 | 191 | 9359 | 196 | 9163 |
| அக்டோபர்,17 | 9163 | 239 | 9402 | 210 | 9192 |
| நவம்பர், 17 | 9192 | 256 | 9448 | 209 | 9239 |
| டிசம்பர், 17 | 9239 | 225 | 9464 | 206 | 9258 |
| ஜனவரி, 18 | 9258 | 234 | 9492 | 242 | 9250 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிப்ரவரி, 18 | 9250 | 236 | 9486 | 269 | 9217 |
| மார்ச், 18 | 9217 | 198 | 9415 | 270 | 9145 |
| ஏப்ரல், 18 | 9145 | 332 | 9477 | 347 | 9130 |
| மே, 18 | 9130 | 284 | 9414 | 268 | 9146 |

### 2.3 சமரச மையம்

நுகர்வோர் நன்மைகளைக் கருதி மாற்று முறை தீர்வுக்காக சமரச மையம் செயல்பட்டு வருகிறது. இத்தீர்வுமையமானது கட்டணம் ஏதுமின்றி பயிற்றுவிக்கப்பட்ட, நடுநிலையான மூன்றாம் நபர், நடுநிலையாளர், பேச்சுவார்த்தை மூலம் வாதி, பிரதிவாதி இருவருக்கும் இடையே தீர்வு காணும் வகையில் முன்னோடி திட்டமாக துவக்கப்பட்டு, **15.12.2011** முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தை மாநில அளவில் தொடர்ந்து மாநில அரசே ஏற்று நடத்தி வருகிறது.

### 2.4. எதிர்கால செயல் திட்டம்

தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் 19 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக இலவசமாக, இடம் பெறுவதற்காக, அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும்

முதன்மை மாவட்ட நீதிபதிகளை அணுகி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது தமிழகத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்த மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களான திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் ஆகியவை முறையே வேலூர், திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து பிரிக்கப்பட்டு தனித்தியங்க ஏதுவாக தமிழக அரசு அரசாணை எண் 99, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எச்2) துறை நாள் 18.07.2017-ல் பிறப்பித்துள்ளது. அதன்படி மேற்கண்ட மூன்று மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களும் தனித்து செயல்பட்டு வருகின்றன. மேலும், ஒருங்கிணைந்து செயல்பட்டு வரும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களான இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகியவற்றை பிரித்து தனித்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.5 தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் அதிகார சங்கம்

நுகர்வோர் நலன்சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை மாநில முழுமைக்கும் ஒரு

குடையின்கீழ் ஒருங்கிணைக்க உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரை தலைவராகவும், அரசு மற்றும் அரசு சாரா துறையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படக்கூடிய வகையில் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் அதிகார சங்கம் எனும் அமைப்பை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும், மாநில நுகர்வோர் உதவி மையத்தை செயல்படுத்தியும் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் கவசம் என்ற மாத இதழை வெளியிடுதல் மற்றும் பயிற்சி கருத்தரங்குகள் நடத்துதல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**2.6 மாநில நுகர்வோர் சேவை மையம்**

மாநில நுகர்வோர் சேவை மையம் ஒரு மேலாளர் மற்றும் 4 தொலைபேசி அழைப்பாளர்களைக் கொண்டு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு, நுகர்வோர் தொடர்பான குறைகளை தீர்க்கும் மற்றொரு அமைப்பாக செயல்பட்டு நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் புகார்கள்/ சந்தேகங்கள் குறித்து உரிய தெளிவுரைகள்

வழங்கப்பட்டும் மற்றும் நுகர்வோர்களால் கொடுக்கப்படும் புகார்களுக்கு தீர்வும் காணப்பட்டு வருகிறது.

மேற்கண்ட சேவை மையத்தினை கீழ்க்கண்டவாறு தொடர்பு கொள்ளலாம்:-

| | |
|---|---|
| தொலைபேசி எண் | 044-28592828 |
| மின்னஞ்சல் முகவரி | **consumer@tn.gov.in**<br>**schtamilnadu@gmail.com** |
| ஆன்லைன் பதிவுச் சேவை இணைய தள முகவரி | **www.consumer.tn.gov.in** |
| குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய செல்பேசி எண் | 8680018002<br>8680028003 |

## 2.7 தமிழ்நாடு நுகர்வோர் கவசம் நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த மாதாந்திர இதழ்

நுகர்வோர்களுக்கிடையே நுகர்வோரின் உரிமைகள், சட்டம் மற்றும் விதிமுறைகள் குறித்து

விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற மாதாந்திர இதழ் வெளியிடப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பொது நூலகங்கள் ஆகியவற்றிற்கு விநியோகிக்கப்படுகிறது. இந்திய செய்தித்தாள் பதிவாளர் அமைப்பில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ள இந்த மாத வெளியீட்டின் விலை ரூ.10/- .மாதந்தோறும் 6000 பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

## இயல் -3

## விலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

### 3.1 முன்னுரை

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்விலிருந்து ஏழை மற்றும் நடுத்தர மக்களை பாதுகாக்கும் பொருட்டு, அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அத்தியாவசிய பொருட்களின் தேவை மற்றும் விநியோகத்திற்கு இடையே உள்ள இடைவெளி, பருவமாற்றங்கள், அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு குறைவு ஆகிய காரணங்களால் விலையேற்றம் ஏற்படுகிறது. இத்தகைய நிலைமைகளை சாமாளிக்க கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு, அக்குழு தீவிரமாக கண்காணித்து தேவைப்படும் நேரங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 3.2 தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

- வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காணப்படும்போது, இதனை

கட்டுப்படுத்தும் முயற்சியில், ஒதுக்கப்பட்ட விலைக் கட்டுப்பாட்டு நிதி ரூ.50 கோடியிலிருந்து விலை உயர்ந்துள்ள பொருட்களை உற்பத்தி மையங்களிலிருந்து கொள்முதல் செய்து இவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அமுதம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் சில்லறை விற்பனை நிலையங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு மானிய விலையில் அரசு விற்பனை செய்து வருகிறது.

- மேலும், 2015ம் ஆண்டில் 100 அம்மா அமுதம் சில்லறை விற்பனை நிலையங்கள் திறக்க விலைக் கட்டுப்பாட்டு நிதியிலிருந்து ரூ.20 கோடி மானியம் ஒதுக்கப்பட்டது.

- அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் விலை கண்காணிப்பு குழு (Price Monitoring Committee) மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டு அதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு

வருகிறது. முக்கியமாக அரிசி, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் வகைகளின் விலைகளை கண்காணித்து, அதன் விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அவ்வப்போது கண்காணிப்புக் குழு கூட்டம் நடத்தப்பட்டு அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை தீவிரமாக கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- உயர்ந்து வரும் காய்கறிகளின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி மையங்களிலிருந்து காய்கறிகளை நேரடியாக கொள்முதல் செய்து, நுகர்வோரின் தேவைக்கேற்ப விற்பனை செய்து வருகின்றன. தற்போது 70 பண்ணை பசுமை காய்கறி கடைகள் மற்றும் 2 நடமாடும் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

- வெளிச்சந்தையில் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் அதிக விலையில் விற்கப்படுவதால், ஏழை மற்றும் நடுத்தரப் பிரிவினர் பயன்பெறும்

வகையில் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளின் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு மானிய விலையில்ரூ. 30/-க்கும், 1 லிட்டர் பாமாயில் ரூ.25/-க்கும் வழங்கப்படுகின்றன.

## இயல் - 4

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

### 4.1 முன்னுரை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்நிறுவனம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டம் பிரிவு 33ன் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனமாகும். பின்னர் இந்நிறுவனம் கம்பெனிகள் சட்டம் 1956 பிரிவு 25ன் கீழ் 01.04.2010 முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகம், பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவு திட்டத்திற்கான அத்தியாவசிய பொருட்களை கொள்முதல் செய்தல், சேமித்து வைத்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

### 4.2 நிறுவனக் கட்டமைப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாண்புமிகுஉணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை

அமைச்சர் அவர்களை குழுமத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது.

இக்கழகம் முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர் தலைமையில் 33 மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தில் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், நியாயவிலை கடைகள் மற்றும் மாநிலம் முழுவதிலும் உள்ள பல்பொருள் அங்காடிகள் ஆகியவைகளில் 7261 நிரந்தரப் பணியாளர்கள் 4024 பருவகால பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இது தவிர, 6029 சுமைதூக்கும் தொழிலாளர்கள், 8726 பருவகால சுமைதூக்கும் பணியாளர்கள் கழக கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் பணிபுரிகின்றனர்.

### 4.3. செயல்பாடுகள் மற்றும் சேவைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு /கனடா மஞ்சள் பருப்பு, பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து சேமித்து வைத்து

பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கும் பணியினை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது.

அ) 12.28 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 284 கிடங்குகள்

ஆ) 1,455 நியாய விலைக் கடைகள் (முழு நேரக் கடைகள் 1178 மற்றும் பகுதி நேரக்கடைகள் 277)

இ) 21 நவீன அரிசி ஆலைகள்

ஈ) 30 மாவட்டங்களில் 72 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்

உ) 22 அமுதம் பல்பொருள் அங்காடிகள்(சென்னை மற்றும் கடலூர்)

ஊ) 3 பெட்ரோல்/டீசல் விற்பனை நிலையங்கள்

எ) 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

ஏ) 5 சமையல் எரிவாயு விநியோக முகமைகள்

ஐ) நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் (நடப்பு ஆண்டில் 1447)

## 4.4. பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள்

### 4.4.1. அரிசி

பொது விநியோகத்திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசியின் அளவில் ஒரு பகுதியை தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013ன் படி இந்திய உணவுக் கழகத்தின் மூலம் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்தும், மீதியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செய்யும் நெல் அரவை மூலமும் பெறப்படுகிறது. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்படி 2.93 லட்சம் மெ.டன் அரிசியை மாதாந்திர ஒதுக்கீடாக மத்திய அரசு வழங்குகிறது. இந்திய உணவுக் கழகத்தால் பல்வேறு வகையினருக்கு வழங்கப்படும் அரிசியின் தற்போதைய விலை விவரம் பின்வருமாறு:-

| வ. எண். | வகை | மாதாந்திர ஒதுக்கீடு (மெ.டன்) | விலை (ரூபாய்/ கிலோ) |
|---|---|---|---|
| 1. | அந்தியோதயா அன்னயோசனா | 57437.202 | 3.00 |
| 2. | முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் | 135783.900 | 3.00 |
| 3. | ஈடுசெய் ஒதுக்கீடு | 99773.138 | 8.30 |
| | மொத்தம் | 292994.240 | |

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களுக்கு தேவைப்படும் மாதாந்திர அரிசி 3.20 இலட்சம் மெ.டன் ஆகும். அந்தியோதயா அன்னயோசனா, முன்னுரிமைப் பிரிவு மற்றும் ஈடு செய் பிரிவுகளின் கீழ் பெறப்படும் மாதாந்திர ஒதுக்கீடான 2.93 லட்சம் மெ.டன் அரிசியை மாநில அரசு முழுமையாக பயன்படுத்துகிறது. பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மைய அரசின் சார்பாக கொள்முதல் செய்யும் நெல் முழுவதையும் அரவை செய்தும், அதனை மைய அரசு வழங்கும் மத்திய தொகுப்பு அரிசி ஒதுக்கீட்டில் ஈடு செய்தும் மாநிலத்தின் பொது விநியோகத் திட்டத்திற்காக பயன்படுத்தி வருகிறது. தற்போதைய பொது விநியோகத் திட்டத்தின் மாதாந்திர அரிசி நுகர்வு 3.17 இலட்சம் மெ.டன் ஆக இருப்பதால், மைய அரசின் ஒதுக்கீட்டிற்கும், மாதாந்திர பொது விநியோகத் திட்ட நுகர்விற்கும் இடையேயான பற்றாக்குறை இடைவெளியானது மைய அரசின் வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் மூலமாகவும் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலமாகவும், தேவையான அளவு அரிசியை கொள்முதல் செய்து ஈடு செய்யப்படுகிறது.

**பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி இயக்கம்**

இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாதந்தோறும் 2.93 இலட்சம் மெ.டன் அரிசியினை நகர்வு செய்கிறது. இந்திய உணவுக் கழகத்தில் 31.05.2018 அன்றைய நிலவரப்படி 46 கிடங்குகளில் 9.64 இலட்சம் மெ.டன் அரிசி உபரி இருப்பு உள்ளது.

**4.4.2 சர்க்கரை**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு, இதர பொருட்களை வழங்குவதைப் போன்று சர்க்கரையும் வழங்கப் படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் குடும்ப அட்டைதாரர்களால் நுகர்வு செய்யப்படும் சர்க்கரையின் அளவு மாதம் ஒன்றுக்கு தோராயமாக 32,000 மெ.டன் ஆகும். பொது விநியோகத் திட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ.25/- எனவும், அந்தியோதயா அன்னயோசனா குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.13.50/- எனவும், மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அரசினால்

கொள்முதல் செய்யப்படும் சர்க்கரையின் சராசரி வெளிச்சந்தை விலைக்கும், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மானிய விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையானது தமிழ்நாடு அரசினால் ஈடுகட்டப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சர்க்கரையினை வழங்குவதால் ஒரு வருடத்திற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.578.40 கோடி மாநில அரசின் உணவு மானியத்தின் மூலம் ஈடுகட்டப்படுகிறது.

**4.4.3 கோதுமை**

மத்திய அரசு, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ன் படி தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் 13,485 மெ.டன் கோதுமையினை நவம்பர் 2016 முதல் ஒதுக்கீடு செய்து வருகிறது. அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களது விருப்பத்திற்கேற்ப நியாயவிலைக் கடைகளில் அரிசிக்கு பதிலாக கோதுமை இருப்பின் அடிப்படையில் விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

### 4.5 சிறப்பு பொது விநியோகத் திட்டம்

வெளிச் சந்தையில் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தினை கட்டுப்படுத்தும் பொருட்டு, பருப்பு மற்றும் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட செறிவூட்டப்பட்ட பாமாயில் குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய சிறப்பு பொது விநியோக திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. செறிவூட்டப்பட்ட பாமாயில் ஒவ்வொரு கிராமிலும், வைட்டமின் 'ஏ' -25 IU மற்றும் வைட்டமின் 'டி' - 2 IU கொண்டுள்ளது. சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் 20,000 மெ.டன் துவரம் பருப்பு/ கனடா மஞ்சள் பருப்பு மற்றும் 1,56,00,000 லிட்டர் (பாக்கெட்டுகள்) செறிவூட்டப்பட்ட பாமாயில் கொள்முதல் செய்யப்படுகிறது.

### 4.6 நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை இயக்கம் செய்தல்

பொதுவாக நியாய விலை கடைகளுக்கான மாதாந்திர ஒதுக்கீட்டில், 60 சதவிகித பொருட்கள்

முந்தைய மாதம் 25-ம் தேதியிலிருந்து நடப்பு மாதம் 5-ம் தேதிக்குள் முன் நகர்வு செய்யப்படுகின்றது. மீதமுள்ள 40 சதவிகித ஒதுக்கீடு நடப்பு மாதம் 20 ஆம் தேதிக்குள் நகர்வு செய்யப்படுகின்றது. இந் நடைமுறையை எளிதாக்குவதற்காக வாலாய நகர்வு முடிவுற்ற அடுத்த நாளிலிருந்தே வரும் மாதத்திற்கான முன்நகர்வினை ஆரம்பிக்கலாம் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது பொது விநியோகத் திட்ட பொருட்களை கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு உரிய காலத்தில் நகர்வு செய்து முடிப்பதை உறுதிப்படுத்தும்.

**4.7 விவசாயிகளிடமிருந்து நெல் கொள் முதல் செய்தல்**

2002-03 ஆம் ஆண்டு கரீப் கொள்முதல் பருவத்திலிருந்து, பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவு கழகத்தின் முகமையாக இருந்து நெல் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசின் அனுமதியின்படி செயல்பட்டு வருகிறது. மேலும், காவிரி பாசன

மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் (NCCF) ஆகியவையும் நெல் கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. கரீப் 2017-2018 கொள்முதல் பருவத்தில், மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை மற்றும் தமிழ்நாடு அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை விவரங்கள் பின்வருமாறு:-

| **ரகம்** | **மத்திய அரசு வழங்கும் குறைந்த பட்ச ஆதார விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்)** | **தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்)** | **விவசாயி களுக்கு வழங்கப்படும் விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்)** |
|---|---|---|---|
| சன்னரகம் (Grade A) | 1590/- | 70/- | 1660/- |
| சாதாரண ரகம் (Common) | 1550/- | 50/- | 1600/- |

## கே.எம்.எஸ். 2017- 2018 ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விவரம்

| கே.எம்.எஸ் | திறக்கப்பட்ட நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் | சன்ன ரகம் (மெ.டன்) | சாதாரண ரகம் (மெ.டன்) | கொள்முதல் செய்யப் பட்ட மொத்த அளவு நெல் (மெ.டன்) | விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | | பயனாளிகளின் எண்ணிக்கை (விவசாயிகள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சன்ன ரகம் | சாதாரண ரகம் | |
| 2017-18 (31.5.18 வரை) | 1447 | 1002249 | 1,52,223 | 11,54,472 | 1660 | 1600 | 3,05,717 |

கரீப் பருவம் 2017-2018 ஆண்டிற்கு மின் வர்த்தனை மூலம் விடுவிக்கப்பட்டத் தொகை ரூ.1907.29 கோடி ஆகும்.

**கொள்முதல் விவரங்கள் 2017-2018** :

| | | |
|---|---|---|
| தமிழ்நாடுநுகர்பொருள்வாணிபக்கழகம் | : | 11,22,692 |
| தேசியகூட்டுறவுநுகர்வோர்இணையம் | : | 27,195 |
| கூட்டுறவுத்துறை | | :4,585 |
| மொத்தநெல்கொள்முதல் | : | 11,54,472 |

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை ரூ.77,76,85,800

**4.7.1 கண்டு முதல் அரிசி**

விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்,

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக 21 நவீன அரிசி ஆலைகளிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் பதிவு செய்துள்ள 368 தனியார் அரவை முகவர்களின் ஆலைகள் மூலமும் தரமான அரிசியாக தயாரிக்கப்படுகிறது. மாநிலத்தின் மாதாந்திர பொது விநியோகத் திட்டத் தேவையில், அரவையின் மூலம் பெறப்படும் அரிசி போக, எஞ்சிய தேவை அரிசியை மாநிலத்திற்குரிய மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டின்படி இந்திய உணவு கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இயக்கம் செய்கிறது. நெல் கொள்முதல் செய்வதிலிருந்து அரிசியாக மாற்றப்படுவது வரை ஆகும் செலவின தொகையை மத்திய அரசு நிர்ணயித்துள்ள பொருளாதார விலையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு மானியமாக பெறப்பட்டு வருகிறது.

## 4.8 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உட்கட்டமைப்பு

### 4.8.1 சேமிப்புக் கிடங்கின் கொள்ளளவு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் மொத்தம் 284 எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகள்

12.28 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் செயல்பட்டு வருகிறது. இவைகளில் 10.84 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 234 கிடங்குகள் கழகத்திற்கு சொந்தமானதாகும். மீதமுள்ள 1.44 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 50 கிடங்குகள் வாடகை அடிப்படையில் பயன்படுகின்றன. பொது விநியோகத் திட்டப் பொருட்களை பாதுகாப்பாக சேமித்து வைப்பதை உறுதிப்படுத்தவும், அதன் சேமிப்பு கொள்ளளவினை மேம்படுத்தவும் அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அதன்படி அரசு கடந்த ஏழு ஆண்டுகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.852.57 கோடி மதிப்பீட்டில் 201 இடங்களில் மொத்தமாக 7.46 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு திறனுடன் கிடங்குகள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 4.77 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 125 கிடங்குகள் ரூ.467.20 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### 4.8.2 சைலோ நெல் சேமிப்பு கொள்கலன் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூர் கிராமத்தில் 50,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நெல் சேமிப்பு கொள்கலன்

(சைலோ) திருத்திய திட்ட மதிப்பு ரூ.64.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இவ்வகை நவீன கொள்கலன்களில் சேமிக்கப்படும் நெல்நீண்ட நாட்களுக்கு தரமாக எடை குறையாமலும் பேரிடர் கால இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாப்பாகவும் குறைந்த பராமரிப்பு செலவிலும் இருப்பு வைக்க பயன்படுகிறது.

### 4.8.3 நியாயவிலைக் கடைகள் கட்டுதல்

தமிழ்நாட்டில் உள்ள 35,169 மொத்த நியாய விலைக் கடைகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 1455 நியாய விலைக்கடைகள், 26 மண்டலங்களில் செயல்பட்டு வருகின்றன. இதில் 124 கடைகள் சொந்தக் கட்டிடத்திலும், 1115 கடைகள் வாடகைக் கட்டிடத்திலும் மற்றும் 216 கடைகள் வாடகையின்றி பிற அரசுத் துறை கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. 125 நியாயவிலைக் கடைகளுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசால் அறிவிக்கப்பட்டு இதுவரை 88 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

### 4.8.4 நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுதல்

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்கு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும் சுமார் 33 சென்ட் பரப்பளவில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு சேமிப்பு வசதி, உலர்களம், நெல் தூற்றும் இயந்திரம், மின்னணு தராசு, ஈரப்பதமானி ஆகிய வசதிகளை கொண்டுள்ளன. விவசாயிகளின் கோரிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மாநிலம் முழுவதும் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.

விவசாயிகளின் நலனில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதால், நேரடி நெல்கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தர கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதில் அரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டித்தரும் நடவடிக்கை படிப்படியாக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு வரை 311 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டிடங்களில்

இயங்கி வருகின்றன. மேலும் கடந்த 2011-2012 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை 335 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு, அவற்றில் 210 இடங்களில் ரூ.63.80 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 4.8.5 நெல் உலர்களம் அமைத்தல்

அரசு வரையறுத்துள்ள நெல்லின் ஈரப்பத அளவிற்கு நெல்லினை உலர்த்துவதற்கும், நெல்லினை சுத்தப்படுத்தி தரம் பிரிப்பதனால் ஏற்படும் இழப்பினைத் தவிர்க்கும் பொருட்டும், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 335 நெல் உலர் களங்கள் அமைக்க அரசால் அறிவிக்கப்பட்டது. அதன்படி இதுவரை 285 பணிகள் ரூ.21.42 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

### 4.8.6 நவீன அரிசி ஆலைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 21 நவீன அரிசி ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மாதாந்திர அரவைத்திறன் 52500 மெட்ரிக் டன்

ஆகும். 15 ஆலைகளில் புழுங்கல் அரிசியும், இதர 6 ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. இவ்வாலைகளின் அரவைத் திறனை மேம்படுத்தவும், அரிசியின் தரத்தை உயர்த்தவும், இவற்றை படிப்படியாக நவீனப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.26.27 கோடி மதிப்பீட்டிலும் இரண்டாம் கட்டமாக, 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.32.60 கோடி செலவிலும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக 2015-16 ஆம் ஆண்டில் மீதமுள்ள 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.36 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.8.7 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளின் செயல்பாடுகளை இயந்திர மயமாக்குதல்

தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 10.84 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 234 சொந்த கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. பொது விநியோக திட்ட அத்தியாவசிய

பொருள்களை ஏற்றுதல், இறக்குதல், நகர்வு செய்தல் மற்றும் தேவையான உயரத்திற்கு அட்டியிடுதல் ஆகிய பணிகள் தற்பொழுது, சுமை தூக்குவோரால் கையாளப்படுகின்றன. பொது விநியோகத் திட்ட பொருட்கள் தவிர சிமெண்ட் மூட்டைகள் போன்றவற்றையும் இவர்கள் கையாளுகின்றனர். மேலும் இச்சுமை தூக்குவோர், பொது விநியோக திட்டத்திற்காக, கொள்முதல் செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களை கிடங்குகளில் இறக்குதல் மற்றும் சமச்சீர் செய்து சிப்பம் இடுதல் போன்ற இதரப் பணிகளையும் மேற்கொள்கின்றனர். இவர்களின் பணிகளை எளிதாக்கும் வகையில் தற்பொழுது கட்டப்பட்டு வரும் அதிக கொள்ளளவு கொண்ட கிடங்குகளில் தானியங்கி இழுவை இயந்திரங்கள் (Conveyors), சுமையினை ஏற்றி இறக்கி அட்டியிடும் இயந்திரங்கள் (Stackers), தானியங்கி சுமைதூக்கி (Fork Lift) மற்றும் மின்னாக்கிகள் (Generators) போன்றவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 4.8.8 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பழமையான கிடங்குகள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் சிறப்பு மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 234 சொந்தக்கிடங்குகள் 10.84 இலட்சம் மெ.டன் கொள்ளளவில் இயங்கி வருகின்றன. இதில் சுமார் 68 கிடங்குகள் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவை ஆகும். இப்பழமையான கிடங்குகளில் பழுதடைந்த மேற்கூரை, கிடங்கின் சுற்றுசுவர், தரைதளம், சுமை ஏற்றி இறக்கும் நடைமேடை மற்றும் சாலை வசதி ஆகியவற்றை சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. இப்பணிகளை படிப்படியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.8.9 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகச் சாலைகள் மற்றும் சுற்றுச் சுவர்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகச் சாலைகள் மற்றும் சுற்றுச்சுவர் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பொது விநியோக திட்ட பொருள்களை மழைக்காலங்களில் நகர்வு செய்வது

சிரமமாக உள்ளது. நகர்வு செய்யும் பொழுது ஏற்படும் இடர்பாடு மற்றும் கிடங்கு பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, சென்னை மாவட்டம் திருவான்மியூர் கிடங்கின் வளாகச் சாலை மேம்பாட்டு பணி ரூ.74.50 இலட்சம் மதிப்பீட்டிலும், கோவை மாவட்டம் சேனாபதிபாளையம் கிடங்கின் வளாகச் சாலை மேம்பாட்டு பணி ரூ.52 இலட்சம் மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டம் உதகை கிடங்கின் வளாகச் சாலை மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.49.50 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம் நீலகிரி தெற்கு தோட்டம் கிடங்கில் சுற்றுச் சுவர் கட்டுமானப் பணி ரூ.24 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் கிடங்குவளாகச் சாலைகள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 4.9 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் இதர சேவைகள்

### 4.9.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

அமுதம் பல்பொருள் அங்காடிகளின் முதன்மையான நோக்கம் வெளிச்சந்தையில் விற்கப்படும் பருப்பு, தானிய வகைகள் மற்றும் வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்களை நியாயமான

விலையில் அமுதம் அங்காடிகளில் விற்பனை செய்வதன் மூலம் வெளிச்சந்தையில் இவற்றின் விலை உயர்வினை கட்டுப்படுத்த உதவுவதாகும். இதனால் வெளிச்சந்தையில் பொருட்களின் விலை ஏற்றம் திறம்பட கட்டுப்படுத்தப்படுகிறது. சென்னை மாநகரில் 19 அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் 3 அமுதம் பல்பொருள் அங்காடிகள் சேர்த்து மொத்தம் 22 அமுதம் பல்பொருள் அங்காடிகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வருகிறது.

**4.9.2 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 30 மாவட்டங்களில் 72 அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டிற்கான விற்று முதல் ரூ.3.12 கோடியாகும்.

**4.9.3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்களை

நடத்தி வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டுக்கான நிகர லாபம் ரூ. 1.03 கோடி ஆகும்.

### 4.9.4 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திருச்சி, திருவண்ணாமலை, நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களில் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்படுகிறது. 2017-2018 ஆம் ஆண்டுக்கான நிகர லாபம் ரூ. 1.80 கோடி ஆகும்.

### 4.9.5 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் மண்டலங்களில் 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 28 சில்லரை விற்பனை நிலையங்களாகவும், 7 சில்லரை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களாகவும், ஒன்றுமட்டும் மொத்த விற்பனை நிலையமாகவும் செயல்படுகின்றன.

### 4.9.6 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள்

பொது மக்களுக்கு நியாயமான விலையில் காய்கறிகளை விற்பனை செய்வதற்காக பண்ணை பசுமை

நுகர்வோர் அங்காடி திட்டத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சென்னையில் 14 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகளை நடத்தி வருகிறது. ஜுன் 2013 முதல் மே 2018 வரையில் ரூ.2.69 கோடி மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 4.10 இதர சேவைகள்

#### 4.10.1 அம்மா சிமெண்ட் விநியோகத்திட்டம்

அம்மா சிமெண்ட் விநியோகத்திட்டத்தின் கீழ் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் 50 கிலோ சிமெண்ட் மூட்டை ஒன்று ரூபாய் 190/-க்கு (வரிகள் உட்பட) விற்பனை செய்யப்படுகிறது. இந்த திட்டத்தின் வாயிலாக தகுதியுள்ள பயனாளிகள் தங்களது கட்டுமான மற்றும் பழுது பார்க்கும் பணிகளுக்கு கீழ்கண்ட அடிப்படையில் சிமெண்ட் மூட்டைகள் பெற தகுதி பெறுகின்றனர்:-

| | |
|---|---|
| ஆதார ஆவணம் | அங்கீகரிக்கப்பட்ட வீடுகட்டும் திட்டத்தின் வரைபடம் அல்லது கிராம நிர்வாக அலுவலர்/ வருவாய் ஆய்வாளர்/ ஒன்றிய மேற்பார்வையாளர்/ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சாலை ஆய்வாளரின் சான்று |

| | |
|---|---|
| கட்டிடம் பழுதுபார்க்க | குறைந்த பட்சம் 10 மூட்டைகள் முதல் அதிகபட்சம் 100 மூட்டைகள் வரை |
| வீடுகட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட அளவு அதிகபட்சம் 1500 சதுர அடி வரை ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் 50 மூட்டைகள் வீதம் | 500 சதுர அடி வரையில்- 250 மூட்டைகள் |
| | 501-1000 சதுர அடி வரை- 500 மூட்டைகள் |
| | 1001-1500 சதுர அடி வரை- 750 மூட்டைகள் |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும் சிமெண்ட் மூட்டைகளை வழங்குவதற்கான பொறுப்பினை தமிழ்நாடு சிமெண்ட் கழகம் ஏற்றுள்ளது.

**அம்மா சிமெண்ட் விற்பனை மற்றும் இருப்பு விவரம் ஏப்ரல் 2017 முதல் மே 2018 வரை**

| ஆரம்ப இருப்பு (மூட்டைகள்) | வரவு (மூட்டைகள்) | மொத்தம் (மூட்டைகள்) | மொத்த விற்பனை (மூட்டைகள்) | இறுதி இருப்பு | மூட்டை ஒன்றிற்கு ரூ.3.50 வீதம் விற்பனை வரவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 14805 | 9588054 | 9602859 | 9561965 | 40894 | 33466877.50 |

### 4.10.2 அம்மா உப்பு விற்பனை

மக்களின் அயோடின் குறைபாடுகளை களையும் வண்ணம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் உப்பு ஆகிய மூன்று விதமான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் நியாய விலைக் கடைகள் மூலமாகபொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இக்கடைகளின் மூலம் மாதந்தோறும் சராசரியாக 254 மெ.டன் உப்பு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### 4.10.3 ஊட்டி தேயிலை

ஊட்டி தேயிலை தூள் பாக்கெட்டுகளை பொது மக்களுக்கு பொது விநியோகத் திட்ட சில்லறை அங்காடிகளின் மூலம் விற்பனை செய்ய தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சில்லறை விற்பனை அங்காடிகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் ஊட்டி

தேயிலை தூள் 100 கிராம் ரூ.19/- என விற்பனை செய்யப்படுகிறது. மேலும் அரசு TANTEA-யினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் அமுதம் சில்லறை அங்காடிகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மூலமும் விற்பனை செய்ய ஆணையிட்டுள்ளது. TANTEA தூள் 100 கிராம் பாக்கெட் ஒன்றுக்கு ரூ.21/-என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 4.11 தகவல் தொழில்நுட்பம்

### 4.11.1 முழு கணினிமயமாக்குதல் திட்டம்

முழுக்கணினிமயமாக்குதல் திட்டம் பொது விநியோகத் திட்டத்திற்கான பொருட்களை கணினி மூலம் ஒதுக்கீடு செய்வதையும், நிகழ் நேர நிலவரப்படியான கொள்முதல் மற்றும் நகர்வு பணி கண்காணிப்பையும் கிடங்கு மற்றும் நியாயவிலைக் கடைகளில் தேவையான அளவு பொருட்கள் இருப்பிலுள்ளதையும், குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய அளவில் விநியோகம் செய்யப்படுவதை கண்காணிப்பு செய்வதையும், சாத்தியமாக்குகிறது. மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கி வரும் பகுதி நேர மற்றும் முழு

நேர நியாய விலைக் கடைகளில் விற்பனை இயந்திரத்தின் (PoS Machine) மூலம் பொது விநியோகப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### 4.11.2 கிடங்கு கணினிமயமாக்குதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கும் கிடங்கு பணிகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மேலும், கிடங்குகளின் அறிக்கைகள் கழக இணையத்தளங்களில் உடனுக்குடன் பதிவு செய்யப்படுகிறது.

### 4.12 தரக்கட்டுப்பாடு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகம் நன்றாக வடிவமைக்கப்பட்ட தரக்கட்டுப்பாட்டுத்துறை செயல்பாட்டினால் ஒவ்வொரு வட்ட செயல்முறை கிடங்கிலும் அத்தியாவசியப் பொருட்கள் அறிவியல் முறைப்படி செம்மையாக சேமித்து வைக்கப்படுகிறது. அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு வகைகள் மற்றும் பாமாயில் போன்ற உணவுப்பொருட்களின் தரம் தொடர்ச்சியாக அளவிடப்படுகிறது. அவ்வப்போது உணவுப்பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு

பகுப்பாய்வு செய்யப்பட்டு தரம் உறுதி செய்யப்படுகிறது. விஞ்ஞான முறையில் கிடங்குகள் அமைக்கப்பட்டு முறையாக காலமுறைப்படி பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டும், புகை மூட்டம் செய்யப்பட்டும், தரத்தினை பாதுகாக்கவும் சேமிப்பு இழப்பைத் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், உணவுப்பொருட்களின் ஈரப்பத அளவினை அறிய ஈரப்பதமானி, பகுப்பாய்வு செய்வதற்கான ஆய்வக உபகரணங்கள், புகை மூட்டம் செய்ய கருப்பு பாலிதீன் உறைகள், அட்டி அமைக்க இரும்பு மற்றும் பாலி பெல்லட் அட்டி கட்டைகள், புற ஊதா விளக்குப்பொறி மற்றும் மருந்து தெளிப்பான் போன்ற உபகரணங்களைக் கொண்டு பூச்சிகளின் தாக்கத்தை கட்டுப்படுத்தியும் உணவு தானியங்களின் தரம் நூறு சதவிகிதம் உறுதி செய்யப்படுகிறது. இதே மாதிரியான தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள், நவீன அரிசி ஆலைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

### 4.13 நிதி நிலை

இந்நிறுவனத்தின் தற்போதைய அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ.100 கோடி மற்றும் ரூ.71.73 கோடியாக உள்ளது.

2013-2014 முதல் 2016-2017 ஆண்டு வரை இக்கழகத்தின் விற்று முதல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

**வருடம் ரூபாய் (கோடியில்)**

| | |
|---|---|
| 2013-2014 | - ரூ.8936.58 கோடி |
| 2014-2015 | - ரூ.8422.55 கோடி |
| 2015-2016 | - ரூ.10153.42 கோடி |
| 2016-2017 | - ரூ.9739.99 கோடி (தோராயமாக) |

2018-2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூபாய் 6000 கோடி உணவு மானியமாக தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.02.2018 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நாகப்பட்டினம், வேலூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 15 நவீன சேமிப்பு கிடங்குகளை திறந்து வைத்தார்கள்.




50,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன நெல் சேமிப்பு சைலோ கொள்கலன் எருக்கூர் கிராமம், சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்



5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்பு கிடங்குகள்
இரும்புத்தலை கிராமம், பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.



2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்பு கிடங்குகள்
அத்தாணி கிராமம், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.10.2017 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலங்களில் காலமான 31 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04–06–2018 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்காலங்களில் காலமான 20 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பருவகால பட்டியல் எழுத்தர்கள் மற்றும் உதவுபவர்களாக பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிரந்தர பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்



நேரடி நெல் கொள்முதல் நிலையம்
அக்கரை கோட்டகம் கிராமம், திருவாரூர் மாவட்டம்




அமுதம் நியாய விலைக் கடை, வியாசர்பாடி, சென்னை

## இயல்- 5

# தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

## 5.1 முன்னுரை

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் நவீன வசதிகளுடன் கூடிய சேமிப்பு வசதிகளை விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்களுக்கு வழங்குவதற்காகவும் விவசாயிகள் மற்றும் வியாபார நிறுவனங்களின் பொருட்களுக்கு தகுந்த பாதுகாப்பு வசதிகள் வழங்குவதை உறுதி செய்வதற்காகவும் தோற்றுவிக்கப்பட்டது. இது வேளாண் உற்பத்தி (மேம்பாடு மற்றும் சேமிப்பு கிடங்கு) நிறுவனச் சட்டம், 1956-ன்படி 1958ல் தோற்றுவிக்கப்பட்டது.

## 5.2 செயல்பாடுகள்

இந்நிறுவனம் பொருட்களின் சேமிப்பு இழப்பினை கட்டுப்படுத்தவும், பொருட்களின் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியும், இயக்கியும் வருகிறது. மேலும், சந்தை வாய்ப்புகளை ஆய்வு செய்து மாநிலத்தின்

ஒவ்வொரு பகுதியிலும் உள்ள விவசாயிகள் மற்றும் இதர வியாபார நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை சேமிப்பதற்காக, சேமிப்புக் கிடங்குகள் மாநிலம் முழுவதும் உருவாக்கப்பட்டுள்ளன. மே 2018 வரை இந்நிறுவனத்திற்கு மாநிலம் முழுவதும் 57 இடங்களில் 270 கிடங்குகள் உள்ளன.

## 5.3 நிறுவனத்தின் அமைப்பு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம் மேட்டுப்பாளையம், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 மண்டலங்களில் செயல்பட்டு வருகின்றன. இம் மண்டல அலுவலகங்கள் முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர் கட்டுபாட்டிலும் மற்றும் சேமிப்புக் கிடங்குகள் அனைத்தும் கிடங்கு மேலாளர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த மேலாண்மை மற்றும் கண்காணிப்பு தலைவர் உள்ளடக்கிய 11 இயக்குநர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. குழுமத் தலைவர் மற்றும் 5 இயக்குநர்கள் மாநில அரசாலும், 5 இயக்குநர்கள் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பாகவும் நியமனம் செய்யப்படுகின்றனர்.

## 5.4 சேமிப்புக் கொள்ளளவு

தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் மொத்த சேமிப்புக் கொள்ளளவு 7.32 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவற்றில் 7.28 இலட்சம் மெட்ரிக் டன் சொந்த சேமிப்புக் கிடங்குகளிலும் 0.04 இலட்சம் மெட்ரிக் டன் வாடகை வளாகங்களிலும் செயல்படுகின்றன.

## 5.5 பயன்பாடு

இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகள் முக்கியமாக இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், ஆவின், தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், சர்க்கரை ஆலைகள், உர உற்பத்தி நிறுவனங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய புகையிலை நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம், தனியார் வியாபார நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 2017–2018-ஆம் நிதியாண்டில் மொத்தக் கொள்ளளவில் 79 சதவிகித பயனீட்டு அளவை தொடர்ந்து எய்தியுள்ளது.

## 5.6. சேமிப்பு கிடங்கினை பயன்படுத்துபவர்கள் மற்றும் இருப்பு வைப்புக்கட்டணத்தில் தள்ளுபடி

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் அரசு/ பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுக்கு இருப்பு வைப்புக் கட்டணத்தில் கீழ்க்கண்டவாறு தள்ளுபடி அளித்து வருகிறது.

| வ. எண். | சேமிப்புக் கிடங்கு பயன்படுத்துபவர் | பொருள் | தள்ளுபடி (விழுக்காட்டில் |
|---|---|---|---|
| 1 | விவசாயிகள் | உணவு தானியங்கள் | 30 |
| 2 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் | உணவு தானியங்கள் | 30 |
| 3 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் | 25 |
| 4 | வருவாய்த் துறை | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் | 20 |
| 5 | கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் | சர்க்கரை | 20 |
| 6 | ஆவின் | பால் பொருட்கள் | 20 |
| 7 | MFL, IFFCO, மற்றும் FACT, KRIBHCO போன்ற பொதுத் துறை உர உற்பத்தி நிறுவனங்கள் | உரம் | 10 |

| | | | |
|---|---|---|---|
| 8 | கைத்தறி கூட்டுறவு சங்கங்கள்/ தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு, விற்பனை இணையம் முதலியன. | வேட்டி, சேலைகள் விவசாயப் பொருட்களான கொப்பரை, சோளம் முதலியன | 10 |
| 9 | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | இந்திய தயாரிப்பு வெளிநாட்டு மதுபானம் | 10 |
| 10 | தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் | காகித தயாரிப்புகள் | 30 |
| 11 | இந்திய புகையிலை நிறுவனம் (ITC) | கோதுமை | 22 |
| 12 | இந்திய உணவுக் கழகம் | மத்திய அரசு நிர்ணயிக்கும் சேமிப்புக் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது | |

## 5.7 சேமிப்புக் கொள்ளளவை மேம்படுத்தவும், எடைமேடை நிறுவவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

பொருட்களின் சேமிப்பு இழப்பு குறைந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் சேமிப்புக் கிடங்கின் கொள்ளளவுத் திறன் உயர்ந்துள்ளது. புதியதாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள கிடங்குகளின் விபரம்:–

| வ. எண். | அமைவிடம் | கிடங்கு களின் எண்ணிக் கை | கொள்ளளவு (மெ.டன்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | நல்லம்பள்ளி கிராமம், தருமபுரி மாவட்டம் | 3 (புதியது) | 15,000 | 17.00 |
| 2 | கோபிச்செட்டிப் பாளையம் கிராமம், பாப்பிரெட்டி பட்டி தாலுகா, தருமபுரி மாவட்டம் | 1(புதியது) | 5000 | 6.00 |
| 3 | அருப்புக் கோட்டை கிடங்கு வளாகம் விருதுநகர் மாவட்டம் | 1(கூடுதல்) | 3,500 | 3.20 |
| 4 | கிருஷ்ணகிரி கிடங்கு வளாகம் கிருஷ்ணகிரி மாவட்டம் | 1(கூடுதல்) | 5,000 | 4.90 |
| 5 | நாஞ்சிக்கோட்டை கிடங்கு வளாகம் தஞ்சாவூர் மாவட்டம் | 2 (கூடுதல்) | 7,000 | 6.40 |
| | **மொத்தம்** | **8** | **35,500** | **37.50** |

## 5.8 சேமிப்புக் கிடங்கின் நிலையினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள்

### 5.8.1 மின்னணு எடை மேடைநிறுவுதல்

மானா மதுரை மற்றும் இராஜபாளையம் ஆகிய சேமிப்புக் கிடங்கு வளாகங்கள் ஒவ்வொன்றிலும் தலா 60 மெட்ரிக் டன் கொள்ளளவில் ரூபாய் 38 இலட்சம் மதிப்பீட்டில் குழியில்லாத மின்னணு லாரி எடை மேடைகள் (Pitless type Electonic Lorry Weigh bridge) 2017-2018 ஆம் நிதியாண்டில் நிறுவப்பட்டுள்ளது.

### 5.8.2 புற ஊதா ஒளிப் பொறிகள் வாங்குதல்

சட்டமன்றத்தில் 2017-2018 ஆம் ஆண்டு மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களது அறிவிப்பிற்கிணங்க, ரூ.15 இலட்சம் செலவில் 239 புறஊதா ஒளிப்பொறிகள் (UltraViolet Light Traps-Pest Control Machine) 26 சேமிப்புக் கிடங்குகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கை மூலம் இந்திய உணவுக் கழகத்தின்உணவு தானியங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ள இடங்களில் பூச்சித் தாக்குதல் இன்றி உணவு தானியங்களின் இருப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது.

### 5.8.3 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்

இந்நிறுவனம் அரசுத் துறைகள், அரசு பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு பூச்சித் தடுப்பு பணிகளை செய்து வருகிறது. இந்நடவடிக்கை மூலம் 2017 – 2018 ஆம் ஆண்டில் ரூ. 58.00 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

### 5.9 நிதிச் செயலாக்கம்

கடந்து நான்கு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதிச்செயலாக்க நடவடிக்கைகள் பின்வருமாறு :-

| விபரம் | 2014 - 15 | 2015 - 16 | 2016-17 | 2017 – 18 தோராயமாக |
|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (மாநில அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தலா 50%) | 7.61 | 7.61 | 7.61 | 7.61 |
| மொத்த வருமானம் | 57.71 | 60.30 | 64.64 | 80.00 |
| செலவு | 30.69 | 35.80 | 34.74 | 48.29 |
| மொத்த லாபம் | 27.22 | 24.50 | 31.18 | 32.29 |


## 5.10 ஆதாயப் பங்கு

2016-2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஈட்டிய நிகர லாபமான ரூ.19.69 கோடியிலிருந்து முன்மொழியப்பட்ட 30% ஆதாய பலனான ரூ.5.91 கோடியினை (பங்கு ஆதாய வரி உட்பட) தனது பங்கு முதலீட்டாளர்களுக்கு வழங்கியுள்ளது.

## 5.11 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளின் மீது கடன் வசதிகள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் 36 சேமிப்பு கிடங்குகள் "சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 2007"-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. சேமிப்புக் கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறை ஆணையம் (WDRA), இந்நிறுவனத்தின் கிடங்கு வசதியைப் பயன்படுத்தும் விவசாயிகள் மற்றும் தனியார் சரக்கு வைப்பாளர்கள், வங்கிகள் மூலம் கடன் பெற ஏதுவாக மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை (Negotiable Warehouse Receipts) வழங்குகின்றது. விவசாயிகள்/சரக்கு வைப்பவர்கள், தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை அடமானம்

வைப்பதன் மூலம் தங்களது சரக்கிருப்பின் மதிப்பில் 60% முதல் 80% வரை கடன் பெற்று வருகின்றனர். 2017–2018-ஆம் ஆண்டில் 1,481 மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் வழங்கப்பட்டு அவற்றின் மீது ரூ. 119.17 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.



# தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்



நாஞ்சிக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.



அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

# இயல்- 6

## அமலாக்கம்

### 6.1 முன்னுரை

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955, கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்பு சட்டம் 1980-இன் கீழ் மத்திய அரசாலும், மாநில அரசாலும் வெளியிடப்பட்ட பல கட்டுப்பாட்டு ஆணைகளை அமல்படுத்துகிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் வாயிலாக கைது, கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல் பறிப்பிழக்க விசாரணை மற்றும் சோதனை மேற்கொள்ளப்படுகிறது. கடத்தல்காரர்களை முன்னெச்சரிக்கையாக 6 மாதம் வரைதடுப்புக் காவலில் வைக்க கள்ளச் சந்தை தடுப்புச் சட்டம் அனுமதிக்கிறது.

### 6.2 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை -அமைப்பும் அதன் செயல்பாடுகளும்

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில் ஒரு

காவல் துறைத் தலைவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள் (சென்னைமற்றும் மதுரை மண்டலம்) மற்றும் நான்கு துணைக் கண்காணிப்பாளர்களை (சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை) கொண்டு செயல்பட்டுவருகிறது. இந்தத் துறையில் உள்ள 33 அலகுகளில், 22 அலகுகள் காவல் ஆய்வாளர்கள் தலைமையிலும் மற்றும் 11 அலகுகள் காவல் உதவி ஆய்வாளர்கள் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. இதைத் தவிர எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் ஐந்து சிறப்பு ரோந்துப் படைகள் இயங்கி வருகின்றன.

## 6.3 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் சாதனைகள்

01.01.2017 முதல் 31.05.2018 வரை 8,232 வழக்குகள் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட அத்தியாவசியப் பொருட்கள் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

1. ரூ.1,12,00,960 மதிப்பிலான 19,824.71 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி

2. ரூ.4,96,410 மதிப்பிலான 33,094 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய்

3. ரூ.3,36,100 மதிப்பிலான 379 எண்ணிக்கை எரிவாயு உருளைகள்

இது தவிர ரூ.2,91,853 மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களான பருப்பு, பெட்ரோல், டீசல், கலப்பட எண்ணெய் போன்ற பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.1,23,25,323 ஆகும். 6801 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 1727 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தென் மாநிலங்களில் துடிப்புடன் செயல்பட்டு வந்த கடத்தல்காரர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இரயில், கப்பல் மற்றும் பெரிய லாரிகள் வாயிலாக கடத்தப்பட்ட அரிசி பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது.

### 6.4 கள்ளச் சந்தை தடுப்புக் காவல்

01.01.2017 முதல் 31.05.2018 வரை கள்ளச் சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் 120 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## 6.5 2017 – 2018 ஆம் ஆண்டில் புதிய முயற்சி

2017-ஆம் ஆண்டு கடைசி காலாண்டில், புதிய முயற்சியாக பொது விநியோகத் திட்டம் தொடர்புடைய அனைத்து தரப்பினர் அடங்கிய குழு *(Stakeholders Committee)* ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவில் அனைத்து தரப்பு மக்கள், குடும்ப அட்டைதாரர்கள், வாகன ஒப்பந்ததாரர்கள், வாகன ஓட்டுநர்கள், கிடங்கு அலுவலர்கள், சுமைதூக்கும் தொழிலாளர்கள், குடிமைப் பொருள் வழங்கல் துறை ஓய்வு பெற்ற அலுவலர்கள் உட்பட பலர் அடங்குவர். இக்குழுவின் கூட்டம் அவ்வப்போது மாவட்ட குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலானாய்வுத் துறை அதிகாரிகளால் நடத்தப்படுகிறது. இதுவரையிலும் 5000-க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற 350 கூட்டங்கள் நடத்தப்பட்டு சுமார் 400 பேர்கள் காவல்துறை நண்பர்கள் இயக்கத்தில் (Friends of Police) உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இக்கூட்டங்களின் வாயிலாகப் பெறப்படும் முக்கியத் தரவுகள் அமலாக்கப்பணி மற்றும் நுண்ணறிவுத் தகவல் சேகரிப்பிற்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. இக்குழு உறுப்பினர்கள் கூட்ட நடவடிக்கைகளின் போது மிகவும் பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இவர்கள்

தெரிவிக்கும் குறைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு நூற்றுக்கணக்கான குறைகள் நிவர்த்தி செய்யப் பட்டுள்ளன. இத்தகையக் கூட்ட நடவடிக்கைகள் பொது மக்களின் மன நிறைவு நிலையை உயர்த்தியுள்ளது.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை "உங்கள் குற்றவாளியைத் தெரிந்து கொள்" (Know Your Criminal) என்ற புதிய முயற்சியில் இறங்கியுள்ளது. "உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்" (Know Your Customer) என்ற கருத்தின் நவீன வடிவமாக "உங்கள் குற்றவாளியைத் தெரிந்து கொள்" என்ற கருத்து அனைத்து அலகு ஆய்வாளர்களுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இம் முயற்சியானது கடந்த காலங்களில் மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களது நடவடிக்கைகளைத் தெரிந்து அவர்கள் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் செயல்களில் இனியும் வருங்காலங்களில் ஈடுபடாமல் தடுக்கும் நடவடிக்கையாகும்.

இக்குழு உறுப்பினர்கள் மூலம் பெறப்படும் தகவல்களால் முக்கிய கடத்தல் வழக்குகள்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில வழக்குகள் முதன்முறையாக கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடு மற்றும் கள்ளத்தனமாக மாற்று இடத்திற்கு பொது விநியோகத் திட்ட அரிசியை கடத்திச் செல்லுதல் போன்ற குறிப்பிடத்தக்க வழக்குகள் ஆகும். இவ்வாறு புதிய யுக்தியில் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் கடத்தல் காரர்களுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்திருப்பதோடு, இனி பொது விநியோகத் திட்ட உணவுப் பொருட்களை கடத்த எத்தனிக்கும் முயற்சியையும் தடுக்கும் விதமாக அமைந்துள்ளது.

பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தலைக் தடுக்க முக்கிய சோதனைச் சாவடிகளில் இரவு வாகனத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசியப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பிற மாநிலங்களுக்கு அரிசி கடத்தப்படுவதைத் தடுக்க குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகள் மாநில எல்லைப் பகுதியில் திடீர் சோதனை நடத்த அனுப்பப்பட்டுள்ளனர். அரிசி கடத்தும் முக்கியக் குற்றவாளிகளை அடையாளம் கண்டு அவர்களை கைது செய்வதற்கு ஏதுவாக

குற்றவாளிகளின் புகைப்படங்கள் எல்லையோரப் பகுதிகளில் ஒட்டப்பட்டன.

தமிழ்நாட்டிலிருந்து அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகாவிற்கு இருப்புப்பாதை தொடர் வண்டிகள் முலம் அரிசி கடத்தப்படுவதைத் தடுக்க அவ்வப்போது சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 1975-ஆம் ஆண்டிலிருந்து 2012 - ஆம் ஆண்டு வரை அத்தியாவசியப் பொருட்கள் சட்டப்பிரிவு 6 (அ)ல் விவரிக்கப்பட்டுள்ள பறிப்பிழக்கம் மற்றும் பறிப்பிழக்கத்திற்கு பதிலாக அபராதம் விதிக்கும் முறை தவறுதலாகப் புரியப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்ததால், அமலாக்கப் பணி பலவீனமடைந்தது. பிரிவு 6 (அ)ன்படி பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தின் சந்தை மதிப்பிற்கு மிகாமல் விதிக்கப்பட்ட அபாரதத் தொகையை வாகன உரிமையாளரிடம் வசூல் செய்த பின்புதான் வாகனத்தை விடுவிக்க வேண்டும். ஆனால் 1975 முதல் 2012 வரை பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தில் கடத்தி வரப்பட்ட அத்தியாவசியப் பொருளின் மதிப்பிற்கான அபராதத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு, வசூலிக்கப்பட்டு வந்தது. 2012-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி

மேற்கண்ட நடைமுறை பிறழ்வுகள் சரிசெய்யப்பட்டு பெரிய அளவிலான அபராதத் தொகை வசூலிக்கப்பட்டு முக்கிய கடத்தல்காரர்களின் செயல்பாடுகள் முடக்கப்பட்டன.

## 6.6 குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் வலைப்பின்னல் முறை அமல்படுத்துதல்

கடத்தல்காரர்கள் மற்றும் கடத்தல் நடவடிக்கைகளைத் திறம்படக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறை அமல்படுத்துதல் (Crime and Criminal Tracking Network and Systems - CCTNS) குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் அமல்படுத்துவதற்கு இடம் தேர்ந்தெடுத்தல் மற்றும் கணிணிகள் வழங்குதல் மாநில குற்ற ஆவணக் காப்பகம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டன. குற்ற வழக்கு விவரங்களை சிப்ரஸ் (CIPRUS) மென்பொருளில் பதிவேற்றம் செய்வதற்கு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## 6.7. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல் பணியாளர்களுக்கு மிகை நேரபணி ஊதியம் வழங்குதல்

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை காவல் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் மிகை நேரப் பணி ஊதியம் (Extra Time Remuneration) ரூ.800/- ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 2014 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

## 6.8 இணைய வழித் தொடர்பு

அனைத்து குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலகுகளுக்கும் அகண்ட அலைவரிசை இணைய இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 6.9 மைய அரசின் பாராட்டுக்கள்

பொது விநியோகத் திட்டப் பொருட்களை கடத்துபவர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டுமென்பது தமிழ்நாடு அரசின் கொள்கையாக உள்ளது. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை இரவு பகல் என பாராது திறம்பட செயலாற்றி கடத்தல்காரர்களை பெருமளவு ஒடுக்கி சாதனை

புரிந்துள்ளது. இப்பணியை உணவுத் துறை அமைச்சர்களுடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் கள்ளச் சந்தை தடுப்புக் காவல் சட்டத்தை முறையாக அமல்படுத்தி கடத்தலை தடுத்து முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என மைய அரசு பாராட்டியுள்ளது.

மைய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத்திட்ட அமைச்சகம் அனைத்து மாநில தலைமைச் செயலாளர்கள், மாநில காவல் துறை தலைமை இயக்குநர்கள் இடையேயான கலந்தாய்வுக் கூட்டத்தில் மற்ற இனங்கள் தொடர்பான விவாதங்களில், சிறப்பு இனமாக, தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் மெச்சத்தகுந்த பணியினை வெகுவாக கீழ்க்கண்டவாறு மைய அரசு தனது 07.05.2015 நாளிட்ட கடிதத்தில் பாராட்டியுள்ளது.

"தமிழ்நாடு மாநிலம்' குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை' என்ற சிறப்புப் பிரிவினைக் கொண்டு பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கடத்தலை தடுக்கும் பணியினைத் திறம்பட செய்து வருகிறது. மற்ற மாநிலங்களும், தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கடத்தலைத் தடுக்கும்

சிறந்த புலனாய்வு நுணுக்கங்களை செயல்படுத்தி கள்ளச் சந்தைக்காரர்களை ஒடுக்கி அரசின் திட்டங்களை முழுமையாக பயனாளிகளுக்கு நேரடியாக சென்றுசேர உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்”.

### 6.10 புதிய கட்டிடம் கட்டுதல்

தமிழக உணவுத் துறையின் பெருமை என்று சொல்லக்கூடிய குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகளை மேலும் முடுக்கிவிடவும், செம்மையாக்கிடவும், இதுகாறும் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த இதன் தலைமை அலுவலக கட்டிடத்தை ரூபாய் 3.69 கோடி மதிப்பீட்டில் கட்ட தமிழக அரசு ஆணையிட்டு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

## முடிவுரை

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்ந்து பெரும் முயற்சி மேற்கொள்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களை குறித்த நேரத்தில் வழங்குவதற்காக விநியோக முறைகளை சீராக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய பரந்த அளவிலான பொதுவிநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையினைக் கட்டுக்குள் வைத்திடவும் அரசு தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நுகர்வோர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானது என அரசு ஏற்றுக்கொள்கிறது. இது தவிர நுகர்வோர்களின்

குறைகளைக் களைந்திட வலுவான கட்டமைப்பு மற்றும் நுகர்வோர்களுக்கான உரிமைகள் மற்றும் கடமைகளை தெரிந்துகொள்ள விழிப்புணர்வினை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இரா. காமராஜ்**
**உணவு மற்றும் நுகர்பொருள்**
**வழங்கல் துறை அமைச்சர்**